# இலக்கியக் கோட்பாடு- இலக்கியத் திறனாய்வு – இலக்கிய வரலாறு

அலகு -1

ப. ரமேஷ்

# உறவுநிலை

- ஒன்றை ஒன்று சார்ந்து இயங்கக் கூடியவை
- அரிஸ்டாட்டில் – கவிதையியல்
- தொல்காப்பியர் – பொருளதிகாரம்
- இருபதாம் நூற்றாண்டுக்குப்பின்

தனித்தனிப் பிரிவாக அறியப்படுகின்றன.

# அறிஞர் கருத்து

- ரெனிவெல்லாக் மற்றும் ஆஸ்டின் வாரன்
- “இம்மூன்றில் ஒன்றினை மற்ற இரண்டின் துணையின்றி அறியமுடியாது”
- இலக்கியத்திறனாய்வு அறிய இ.கோட்பாடும் இ. வரலாறும்

# இலக்கியக்கோட்பாடு

- தியரி Theory – கொள்கை
- டாக்ட்ரின் Doctrine – கோட்பாடு
- பிரின்சிபில் Principle – விதி
- கொள்கை –
- கோட்பாடு- கொள் வேர் சொல்
- கை, பாடு என்பன விகுதிகள்

# அகராதி விளக்கம்
## தியரி

- சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி
- 1. புனைவு
- 2. புனை கருத்து
- 3. கருத்தியல் திட்டம்
- 4. நடைமுறை சார்ந்த கோட்பாடுத் திட்டம்
- 5. தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை
- 6. ஒரு நிலைக் கோட்டு
- 7. மேலாராய்ச்சிக்கு அடிப்படையான யூகக் கோட்பாடு
- 8. விளக்கக் கோட்பாடு

# டாக்ட்ரின் (Doctrine)

- 1. கோட்பாடு
- 2. வகுத்து அமைத்த கொள்கை
- 3. விளக்கம்
- 4. போதனைத் தொகுப்பு
- 5. சித்தாந்தம்
- 6. அரசியல், தத்துவக் கோட்பாடு
- 7. சமய முடிவு விளக்கக் கோட்பாடு
- 8. அறிவியல் விளக்கக் கோட்பாடு

# பிரின்சிபில் Principle

- 1. தத்துவம்
- 2. அடிப்படை மெய்ம்மை
- 3. மூலக்கோட்பாடு
- 4. பொது அமைதி
- 5. பிறப்பு முதல் தோற்றுவாய்

# வேறுபாடுகள்

- பொதுவான கூறுகள் – தொடக்கக்காலச் செயல்பாடு – கொள்கை
- பொதுக்கூறுகள் –நிலைத்து விடும்போது – கோட்பாடு
- தொடர்ந்து நிலைபெறும்போது விதி
- மீறும் போது தண்டனை - சட்டம்

# அறிஞர் கருத்து

- பேரா. க. சிவத்தம்பி
- கொள்கை- கோட்பாடு - வேறுபாடு
- ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்படும் அபிப்ராயங்கள் எண்ணக் கருத்துக்கள் ஆகியவற்றைக் கொள்கையெனலாம். தொடர்ந்து குறிப்பிட்ட இலக்கியக் கொள்கை காரணமாக இலக்கியத்தின் உருவிலும் பொருளிலும் ஏற்படும் அமைவுநெறி அல்லது ஒரே சார்பான அமைவுநெறிகளின் தொகுதி (ஏற்றுக்கொள்ளப்பட் நெறி) கோட்பாடு என்றும் அழைக்கப்டும்.

# தொல்காப்பியத்தில்

- பெருமையும் உரனும் ஆடுஉ மேன (களவு-7) 1043
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி இயல்புகள் உண்டு. ஆளுமைத் தன்மை உடையவர்கள் -ஆண் பேணும் தன்மை உடையவர்கள்- பெண்
- தொல்காப்பியர் இந்த வேறுபாட்டை உணர்த்துகிறார்.
- ஆண் தன்மை பெருமை - பலராலும் மதிக்கப்படும் பெருந்தன்மை
- உரன் - பெண்களைக் காட்டிலும் அதிக உடல் வலிமை
- பெண் தன்மை[2]அச்சம் (அஞ்சாமை ஆண்குணம். அஞ்சுவது பெண்ணியல்பு)
- நாண் (பிற ஆடவரைக் கண்டால் வெட்கப்படுதல்)
- மடம் (கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை)
- நிச்சம் (பயிர்ப்பு) ((முன் பின் பயிற்சி இல்லாதவர்களிடம் தோன்றும் கூச்சம்)

# கோட்பாடு – திறனாய்வு - உறவுநிலை

- இலக்கியக்கொள்கை உருவாவதற்கு காரணமானவர்கள்
- 1. படைப்பாளி
- 2. திறனாய்வாளர்
- படைப்பாளி வாழ்க்கையிலிருந்து கொள்கைகளை இலக்கியத்தின் மூலமாக முன் வைக்கிறார்.
- திறனாய்வாளர் இலக்கியங்களிலிருந்து கொள்கைகளை வகுத்தளிக்கிறார்.

# முன்னோடிகள்

- அரிஸ்டாட்டில்  - கவிதையியல்
- தொல்காப்பியர் - தொல்காப்பியம்

# இலக்கியக்கொள்கையின் பயன்பாடு

- இரு வேறு கருத்து
- 1. இலக்கியத்திற்கேற்ப கோட்பாட்டைக் கண்டறிந்து வாசித்தல்
- 2. வாசகர் தன் கோட்பாட்டை முன்வைத்து வாசித்தல்- மார்க்சியம், பெண்ணியம்- மானிடவியல்

# இலக்கியவரலாறு

- எந்த ஒன்றிற்கும் வரலாறு இருக்கிறது, தோற்றம் , வளர்ச்சி, உச்சம்,இறக்கம் ,முடிவு என்று வரலாற்றுப் படிநிலைகள் தவிர்க்க முடியாதவை – சார்லஸ் டார்வின்
- இலக்கியம் தோற்றிய காலத்தை அறியாது திறனாய்வோ இலக்கிய கொள்கையோ முழுமையாக வெளிப்படுத்திக் கொள்ளமுடியாது

# ரெனிடிவெல்லாக்& ஆஸ்டின் வாரன்

- திறனாய்வு, கொள்கை, வரலாறு ஆகியவற்றின் நோக்கம் செயல்முறை பயன் வெவ்வேறானவை
- “பொதுவாக இலக்கியத் திறனாய்வுக்கும் இலக்கிய வரலாற்றிற்கும் இடையே நிலவும் பிரிவினை, இவ்விருதுறைகளுக்கும் தீமை பயப்பது”

# எம். டபிள்யு. பாற்றீசன்

- "இலக்கியவரலாறு என்பது ஓர் இலக்கியத்தின் காலத்தை மட்டும் ஆராய்வதல்ல. ஓர் இலக்கியத்திலிருந்து மற்றோர் இலக்கியம் எவ்வாறு பிறக்கிறது என்று மரபுத் தொடர்ச்சியையும் விளக்கிக் கூறுவது"

- இலக்கியம் எவ்வாறு பிறந்தது – இலக்கியவரலாறு
- இலக்கியம் எவ்வாறு சிறந்தது அல்லது சிறப்பானது அல்ல என்று விளக்குவது - இலக்கியத்திறனாய்வு
- இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்குத் திறனாய்வுப் புலமையும்
- இலக்கியத்திறனாய்வாளர்களுக்கு வரலாற்றுப் புலமையும் இருக்க வேண்டும்

# ரெனிடிவெல்லாக்& ஆஸ்டின் வாரன்

- “இலக்கிய வரலாற்று வல்லுநன், வரலாற்று வல்லுநனாக இருப்பதற்காகவாவது ஒரு திறனாய்வாளாராக இருந்தே ஆக வேண்டும்”

# டெரி ஈகிள்டன்

- இலக்கியத்திறனாய்வு இலக்கியக்கொள்கை வகுப்பதிலும் இலக்கிய வரலாறு எழுதுவதிலும் நீக்கமற நிறைந்து விளங்குகிறது.
- "இலக்கியத் திறனாய்வு ஒரு நிறுவனம் என்று சொல்லும் அளவிற்கு ஆற்றல் வாய்ந்தது"

# டெரி ஈகிள்டன்

- திறனாய்வு நிறுவனம் தனக்கேயான சொல்லாடலை வடிவமைத்துக் கொண்டு தனது நோக்கமான இலக்கியம் குறித்த மதிப்பீட்டினை, நிறுவனத்திற்குரிய அதிகாரக் குணத்தோடு கட்டமைக்க முயலுகிறது. சொல்லாடல் என்பது குறிப்பிட்ட நோக்கில் மொழியைக் கட்டமைக்கிற ஒரு செயல்பாடுதான்.

# டெரி ஈகிள்டன்

- இது அதிகாரச் செயல்பாட்டின் ஒரு குணம். திறனாய்வு அப்படித்தான் இலக்கியத் தளத்தில் அதிகாரமாக இயங்குகிறது. தான் திறனாய்வு செய்யும் படைப்பு குறித்துச் சில குறிப்பான வாசகங்களைத் தேர்ந்தெடுத்துத் தயாரிக்கிறது. அவற்றை வடிவமைக்கிறது. தொடர்ந்து உரையாடுவதன் மூலம் அவற்றை நிலைபெற வைக்கிறது. இவ்வாறு ஓர் அதிகார சக்தியாகத் திறனாய்வு இலக்கிய உலகில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

# வரலாற்றியல் திறனாய்வு

அலகு -1

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- வரலாற்றியல் திறனாய்வு –தோற்றம், வளர்ச்சி
- 1.இலக்கியத்தை வரலாற்றுப் பின்னணியில் காணுதல்
  - வரலாற்றுச் சூழலமைவு
  - வரலாற்றியல் திறனாய்வும் மார்க்சிய அறிஞர்களும்
- 2.இலக்கியத்தின் வரலாறு காணுதல்
  - வரலாறும் கதை வடிவங்களும்
  - தொடக்க கால வரலாற்று நூல்கள்
  - 20 ஆம் நூற்றாண்டில் வரலாற்று நூல்கள்
  - இலக்கிய வரலாற்றெழுதியல்
  - இலக்கிய வரலாறும் நாட்டுப்புற மரபும்
- 3.இலக்கியத்தை வரலாற்று மூலமாகக் கொள்ளுதல்

# வரலாற்றியல் திறனாய்வு – தோற்றம், வளர்ச்சி

- "வரலாற்றிலிருந்து உருவாகுகிற ஒன்றாகவும் அதேநேரத்தில் வரலாற்றையே உருவாக்குகிற ஒன்றாகவும் இயங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டது இலக்கியம்"
- "வரலாற்றுப் பின்னணியில் நிறுத்தி இலக்கியத்தைத் திறனாய்கிற ஒன்றுதான் வரலாற்றியல் திறனாய்வு"
- இரண்டு முறையில் ஆராய்வது
  1. கிடைநிலை (Horizontal)
  2. செங்குத்து நிலை (Vertical)

- கிடைநிலை – சமகாலத் தன்மை
  - பாரதியார் பாஞ்சாலி சபதம் – சொல்லாட்சி, சந்தம், உவமை, உருவகம், உணர்ச்சி ஆகியவற்றின் மூலம் விளக்க முயல்வது
- செங்குத்து நிலை – வரலாற்றுத் தன்மை
  - பாஞ்சாலி சபதம் – வியாசர் – வில்லிபுத்தூரார் – பாரதியார் – காலச்சூழல், ஒற்றுமை, வேற்றுமை, அகப்புறக் காரணிகள் என விளக்க முயல்வதே வரலாற்றியல் திறனாய்வு

# வரலாற்றியல் திறனாய்வின் தோற்றமும் வளர்ச்சியும்

- 18 ஆம் நூற்றாண்டு
- நவீனத் திறனாய்வு
- கிரேக்க இலக்கியம், உரோமானிய இலக்கியம், சேக்ஸ்பியர் நாடகங்கள்
- 19 ஆம் நூற்றாண்டு  கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டு வளர்ச்சிக்குப்பின்
- 20 நூற்றாண்டு – மார்க்சியத் திறனாய்வு, ஒப்பிலக்கியத் திறனாய்வு முக்கியத்துவம் பெற்றது.
- தம்மேம்பாட்டுக்கொள்கைக்குப் பின்
- கல்வெட்டு, செப்பேடு , தொல்பழம் இலக்கியங்கள். ஓவியங்கள். சிற்பங்கள், ஓலைச்சுவடி

- 1. இலக்கியத்தை வரலாற்றுப் பின்னணியில் காணுதல்
- 2. இலக்கியத்தின் வரலாறு காணுதல்
- 3. இலக்கியத்தை வரலாற்று மூலமாகக் கொள்ளுதல்

# 1. இலக்கியத்தை வரலாற்றுப் பின்னணியில் காணுதல்

- வரலாற்றுப் பின்னணியில் உருவாகக்கூடியவை
  - கருத்து, சொல் முறைகளான உவமை, உருவகம் , சந்தம், யாப்பு, முரண்
  - சங்க இலக்கியங்களின் பாடுபொருள்கள்
  - காதலும் வீரமும்
  - இடைக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள்
  - 20 ஆம் நூற்றாண்டில்  ஏற்பட்ட இலக்கிய மாற்றங்களுக்கு அடிப்படை சமூக மாற்றங்கள்
  - 1. கல்வி, பெருவாரி மக்களுக்கானதாக மாறியது
  - 2. மக்களாட்சி முறை மலர்ந்தது
  - 3. அச்சுகலை வந்தது

- 4. செய்தி மற்றும் இலக்கிய இதழ்கள் வாழ்வோடு பிரிக்கமுடியாதபடி அமைந்தன
  5. பெருவாரி மக்கள் அரசியல் முன்னுக்கு வந்தது
- 6. ஆங்கிலக் கல்வியும் ஆங்கில மொழியும்
- 7. தேசிய இயக்கம் வளர்ந்தது
- 8. உரைநடை இலக்கியம் செல்வாக்குப் பெற்றது.
- பாரதியார் இலக்கியங்களின் வடிவம்
- நாட்டுப்புறப்பாடல் வடிவங்கள், சிந்துப் பாடல்வடிவங்கள், குடுகுடுப்பைக்காரன் பாட்டுவடிவம்

# வரலாற்றுச் சூழலமைவு

- ஐந்து வகை – தி.சு. நடராசன்
  - 1. குறிப்பிட்ட காலமும் இடமும் குறிப்பிட்ட வகையான கலை, இலக்கியங்களைத் தோற்றுவிக்கின்றன.
  - 2.கலை இலக்கியத்தின் பாணி, நடை, உத்தி ஆகியவற்றிக்கு அக்கால சூழல் காரணம்
  - 3.கலை-இலக்கியம் கூறும் செய்தி, வரலாற்றுச் சூழலமைவினை சார்ந்து. எனவேதான் அதன் விளக்கம் அவ்வச் சூழலமைவின் மனதிற் கொண்டதாக அமைகிறது. (எ.கா. வள்ளுவரின் பெண்வழிச்சேறல் )
  - 4. கலை, இலக்கியம் பற்றிய இரசனையும் ஏற்பும் கூட அவ்வக்காலச் சூழலமைவினைப் பொறுத்ததே (பரணி, உலா போன்றவை)

# வரலாற்றியல் திறனாய்வில் மார்க்சிய அறிஞர்கள்

- 5. குறிப்பிட்ட காலச் சூழலமைவு என்பது திரும்ப மீண்டும் அப்படியே நிகழ்வதில்லை.

நாடகவடிவத்தின் தோற்றம் வேட்டைத் தொழில்

-பேராசிரியர் தாம்சன்

நிலவுடையாளர்கள் புதிய வணிக வர்க்கங்களின் போட்டியே சிலப்பதிகாரம் - இரகுநாதன்

இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் நாயக்கர் மன்னர்களுக்கு எதிரலான குரல் – தி.சு. நடராசன்

1. அரசர்களின் பெயரைக்குறிப்பிடாது அரசுக் காரியங்களைச் சாடுதல் –
2. நாயக்க மன்னர்களைத் தவிர்த்து சிறு சிறு வட்டார அதிகார மையங்களாகிய பாளையங்களைப் புகழ்தல்
3. சமகால மன்னர்களை உதாசீனப்படுத்திவிட்டு தமிழ் அரசு மரபினரை வலிந்து புகழ்தல்

## 2. இலக்கியத்தின் வரலாறு காணுதல்

- ஒடுக்கப்பட்ட சமூகம் ஒன்று திரண்டு போரிடுவதற்கான வரலாற்றுச் சூழலில் தனக்கான வரலாற்றை எழுத முயலும்
- வெள்ளையர்களின் ஆதிக்கம் – விடுதலை வேட்கையின் போது இந்திய, தமிழ்நாட்டு வரலாற்று நூல்கள் எழுந்தன.
- இதன் கிளையே அந்நாட்டு இலக்கியங்களின் வரலாறு எழுதுதல்
- இலக்கியவரலாறு என்பது காலவரிசையோடு,பின்புலத்தையும் எழுதுவதாகும்.

# வரலாறும் கதை வடிவங்களும்

- சமூகத்தின் மறுமலர்ச்சிக்கான உந்துதலை நோக்கியதே இலக்கியவரலாறு  எழுதுதல்
- வரலாற்றில் நிறுத்தி திறனாயும் போது அதிகபட்சமான அளவிற்குப் புரிந்து கொள்ளமுடியும்.
- வரலாறு இலக்கியத்தை விரிவு செய்கிறது.
- காலந்தோறும் புதிய வடிவம் கொள்கிறது
- சிலப்பதிகாரம் கண்ணகி கதை
- ஈழத்தில் உள்ளது
- மலையாளத்தில் உள்ளது
- சங்க இலக்கியத்தில் உள்ளது

- புகழேந்தி புலவர் – கோவிலன் கதை
- சங்கரதாஸ் சுவாமிகள் -கோவலன் சரித்திரம்
- கருணாநிதி – சிலப்பதிகார நாடகக் காப்பியம்
- திரை வடிவில் – கண்ணகி, பூம்புகார்

# இலக்கியவரலாறு எழுதுதல்
## தொடக்க கால வரலாற்று நூல்கள்

- முதல் நூல் -ஆங்கிலக் கதை வரலாறு-நான்கு பகுதி- தாமஸ் வார்டன்
- 1979இல் புலவர்களின் வாழ்க்கை – டாக்டர் ஜான்சன்
- தமிழில் 19ஆம் நூ. அதற்கு முன்பு தமிழ்விடுதூது
- நூல் தோன்றிய காலம், சமூகச்சூழல், மூலநூல், மரபுத்தன்மை, புதுமைத்தன்மை
- அதன் சிறப்பையும் மதிப்பிடவேண்டும்.
- 1859 – சைமன் காசிச்செட்டி – ஆங்கில நூல் தெ தமிழ் புளூடார்க் (The Tamil Plutarch) 196 புலவர்களின் வாழ்க்கை வரலாறு
- நம்மாழ்வாரைப் பற்றிக் கம்பர் – சடகோபர் அந்தாதி

- உமாபதி சிவாச்சாரியார் -சேக்கிழார் புராணம்
- சிவப்பிரகாச சுவாமிகள் – நான்மணிமாலை
- படிகாசுக்காசுப்புலவர் – தொண்டை மண்டலச் சதகம் - கற்பனை கலந்து
- சோழ மண்டிலச் சதகங்கள், கொங்கு மண்டிலச் சதகங்கள் – வட்டாரப் புலவர்களின் வரலாறு கூறுகின்றன.
- தமிழர் நாவலர் சரிதை – 51 புலவர்களின் வாழ்வியல் நிகழ்வுகள்
- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி- புலவர் வரலாறு
- வீரசாமிச் செட்டியார் – விநோதரச மஞ்சரி
- ஆ. சதாசிவம் பிள்ளை- பாவலர் சரித்திர தீபம்

# 20 ஆம் நூற்றாண்டில் வரலாற்று நூல்கள்

- பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை
- 1. சென்னைக் கிறித்துவக் கல்லூரி மலர் – ஆங்கிலம் – பத்துப்பாட்டு குறித்து கட்டுரை (The Ten Tamil Idys)
- 2. தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மைல்கற்கள் அல்லது திருஞானசம்பந்தரின் காலம்
- 3. என். கிருஷ்ணசாமி ஐயங்கார் – தமிழிலக்கியத்தில் அகஸ்டன் காலக் கட்டம்
- 4.ஜி.யு.போப் – தமிழ் நிலத்துக் கவிஞர்கள் (The Poets of Tamil lands)

# இலக்கிய வரலாறு -எழுத்தாளர்கள்

- எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை- தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்)
- கா.சு. பிள்ளை, எஸ். வையாப்புரிப் பிள்ளை, கே. என். சிவராஜ் பிள்ளை, மயிலை சீனி. வேங்கடசாமி, தெ.பொ. மீனாட்சி சுந்தரம், மு. வ., ஆ. வேலுப்பிள்ளை, மு.அருணாச்சலம், சிட்டி சிவபாதசுந்தரம், தமிழண்ணல், விமலானந்தன், கா. சிவத்தம்பி
- ஆர். கால்டுவெல், ஜே. வில்சன், பரிதிமாற்கலைஞர், சி.வை. தாமோதரம் பிள்ளை, எம். சீனிவாச ஐயங்கார்,ஹற்ச். ஜேசுதாசன், ஆர். சிதம்பரநாதன் செட்டியார்

# இலக்கிய வரலாற்றெழுதியல் (Literary Historiography)

- வரலாற்றியல் அணுகுமுறை – இலக்கியத்தை வரலாற்று அடிப்படையில் அணுகிறது.
- இலக்கிய வரலாற்றெழுதியல் – எழுதப்பட்ட இலக்கிய வரலாற்று நூல்களைத் திறனாய்வு செய்கிறது.
  - வரலாற்றுப் பகுதிகளைப் பிரித்துள்ளார்கள்?
  - எழுத்தின் நோக்கம் என்ன?
  - தன்மை என்ன?
  - நிறைகுறைகள் யாவை?

இலக்கியம் குறித்த உரையாடல் பன்மடங்கு பெருகும்

இலக்கியம் வரலாற்றின் உற்பத்தி பொருளாக விளங்குவது அறியவரும்

# கமில் சுவலபில் (KAMIL V.ZVELEBIL)

- தமிழ் இலக்கிய வரலாறு குறித்த ஓர் ஒருங்கிணைந்த பார்வை (Companion studies to the History of Tamil literature 1982)
- நூற்றாண்டு இலக்கிய வரலாற்று நூல்களை திறனாய்வு செய்தார்
- ஆர். கால்டுவெல் (7 ஆக பிரிக்கிறார்)
  - 1. சைனமதச் சூழல்வட்டம் ( கிபி8 –கிபி13)
  - 2. தமிழ் இராமாயண சூழல்வட்டம் (கிபி13)
  - 3. சைவ மறுமலர்ச்சி சூழல் வட்டம் (கிபி13-14)
  - 4. வைணவ சூழல்வட்டம் (கிபி 13-14)
  - 5. இலக்கிய மறுமலர்ச்சிச் சூழல்வட்டம் (கிபி 17
  - 6. பிராமண எதிர்ப்புச் சூழல் வட்டம் (கிபி17)
  - 7. தற்காலம் (கி.பி. 18-19)
  - சமயஅடிப்படையானது
  - ஓர்மை இல்லை

- ஜே. வில்சன் (5 ஆக பிரிக்கிறார்)
  - 1. கட்டுரை, அறிக்கை, சிறுசிறு கவிதைக் காலம் (கி.பி.6-7)
  - 2. ஜைனமதம் மேலோங்கிய காலம் (கிபி 8)
  - 3. சைவ-ஜைன போராட்டக் காலம் (கி.பி.9)
  - 4. சைவம் மேலோங்கிய காலம் (கிபி10)
  - 5. வைணவக் காலம் (கிபி15-16)

இலக்கிய வடிவம், பின் மத அடிப்படையில் பகுப்பு

கே.வி. சூரிய நாராயண சாஸ்திரி

சி.வை. தாமோதரம் பிள்ளை

ஆகியோரின் பகுப்பு முறையில் வரலாற்றுணர்வு இல்லை.

- எம். சீனிவாச ஐயங்கார்,எம். பூரணலிங்கம் பிள்ளை, க. இராமசாமி நாயுடு, தெ.பொ. மீனாட்சி சுந்தரம்,
- ஆ. வேலுப்பிள்ளை -
  - 1. இயற்கை நெறிக்காலம்
  - 2. அறநெறிக்காலம்
  - 3. சமயநெறிக்காலம்
  - 4. தத்துவ நெறிக்காலம்
  - 5. அறிவியல் நெறிக்காலம்
  - தமிழலக்கியத்தில் காலமும் கருத்தும் நூல்
  - கருத்து அடிப்படை பகுப்பு –ஏற்க முடியாது
  - ஆல்பர்ட் சுவைட்சர்- இந்தியச் சிந்தனைகளும் அவற்றின் வளர்ச்சிகளும்(1936)
- தெ.பொ. மீனாட்சி சுந்தரம்
  - மன்னர்களின் அடிப்படையில் பகுத்துள்ளார்

# கமில் சுவலபில் -பகுப்புமுறை

- பக்தி இலக்கியத்திற்கு முந்தைய இலக்கியம்
  - 1. பாணர்களின் காலம் (கிமு150-கிபி250)
  - 2. பின் செவ்வியல் காலம் (கிபி250 கிபி600)
- பின்பக்தி இலக்கியம்
  - 3. பக்தி இலக்கியம் ( கி.பி.600-900)
- இடைக்கால இலக்கியங்கள்
  - 4. முன் இடைக்காலம் ( கிபி900-1200/1400)
  - 5. பின் இடைக்காலம் (கிபி1200/1400 – 1750)
- தற்கால இலக்கியங்கள்
  - 6.தற்கால இலக்கியத்திற்கு முந்தைய காலம் (1750-1900)
  - 7.தற்கால மற்றும் சமகால இலக்கியம் (1900-1980)

ஓர் ஒருமை இல்லை,

- கருத்து அடிப்படை - பக்திஇலக்கியம்
- படைப்பாளி அடிப்படை -பாணர்கள் காலம்.
- ஆங்கில அடிப்படை – செவ்வியல்
- கால அடிப்படை - இடைக்காலம், தற்காலம்

- “ரெனிவெல்லாக் & ஆஸ்டின் வாரன்”
  - இலக்கியத்தின் காலப்பகுப்பு முறை என்பது வெறுமனே ஒவ்வொரு இலக்கியமும் தோன்றிய காலத்தைச் சுட்டிவிட்டுப் போவதல்ல, மாறாக இலக்கியம் ஒரு நெறியிலிருந்து மற்றொரு நெறிமுறைக்கு மாறி அடைந்த மாற்றங்களை அடையாளம் காணக்கூடியதாக அமையவேண்டும்”

# தி. சு. நடராஜன்

- 1. நூற்றாண்டுக் கால வரிசை
  - கிமு, கிபி, என்பது போல்
- 2. அரச மரபு வரிசை
  - மூவேந்தர் காலம், களப்பிரர் காலம்
- 3. இலக்கிய வகைகள்
  - காப்பிய இலக்கியம், உரைநடை இலக்கியம்
- 4. இலக்கிய இயக்கங்கள்
  - பக்தி இலக்கிய இயக்கம், சீர்திருத்த இலக்கிய
- 5. கருத்து அடிப்படை
  - அக, புற, நீதி

ஒரு நெறியிலிருந்து மற்றொரு நெறிக்கு மாறிய மாற்றங்களையும் காரண காரியங்களையும் விளக்குவதான் உண்மையான இலக்கிய வரலாறு

# இலக்கிய வரலாறும் நாட்டுப்புற மரபும்

- இலக்கியவரலாற்று ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளவேண்டியவை
  - வரலாறு என்பது அதிகாரத்தில் இருந்த மன்னர்களின் வரலாறு தான்
  - இலக்கிய வரலாறும் எழுதப் பட்ட இலக்கியங்களின் வரலாறு தான்
  - வாய்மொழி இலக்கியங்களுக்கும் முக்கியத்தும் அளிக்கப்படவேண்டும்.
  - சங்க இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியங்கள் -கைலாசபதி
  - வீரயுகப்பாடல்கள் வாய்மொழிப்பாடல்கள்தான்
  - மூவேந்தர்களின் ஆட்சியின் முடிவில் தான் சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்டது - கமில்

- இருளர் சமூகத்தின் நிலவும் வாய்மொழிப் பாடல்கள்
- வாய்மொழி பாடல்களை புறக்கணித்த ஜீலியன் வின்சன் கி.பி5 -6 முன் தமிழில் இலக்கியம் இல்லை என்கிறார்
- சொந்த சாதி மத  விருப்பு வெறுப்புகளை தாண்டி செயல்படவேண்டும்
- சாமிநாத தேசிகர் 1750 –
  - “பக்தி இலக்கியங்களுக்கு முந்தைய இலக்கியங்களை படிப்பது குற்றம் ”
  - சமண,புத்த, வைணவ நூல்களைப் படிக்கக்கூடாது
- டி.கே. சிதம்பர நாத முதலியார்–
  - கம்ப ராமாயணத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் இடைச்செருகல் என்றார்
  - அதிகார நுண் அரசியலை அடையாளம் கண்டு புலப்படுத்த வேண்டும்
  - வாழ்நாள் பணி

# 3. இலக்கியத்தை வரலாற்று மூலமாகக் கொள்ளுதல்

- வரலாற்றுத் துறை அறிஞர்களின் மூல ஆதாரங்கள்
  - 1. புதைபொருள், அகழ்வாராய்ச்சி சான்றுகள்
  - 2. கல்வெட்டு, செப்பேடு
  - 3. அரசின் ஆவணக் காப்பகங்களில் திரட்டி வைக்கப்பட்டிருக்கும் ஆவணங்கள்
  - 4. பழங்காலச் சிற்பங்கள் ஓவியங்கள்
  - 5. அச்சேறிய நூல்கள்
  - 6. கையெழுத்துப் படிகள்
  - 7. தனிநபர் கடிதங்கள்
  - 8. புராணங்கள் இதிகாசங்கள்
  - 9. பழங்காலப் பத்திரிகைகள்
  - 10.நாட்குறிப்புகள் (அனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு)
  - 11. நாட்டுப்புற வழக்காறுகள் /சொல்கதைகள்
  - 12. வாழ்க்கை வரலாற்று நூல்கள்
  - 13. இலக்கியங்கள்

# தாமஸ் வார்டன்

- “இலக்கியம் ஒரு காலத்திற்குரிய சிறப்புப் பண்புகளை அவ்வாறே பொறிக்கிறது. அக்காலப் பழக்க வழக்கங்களை ஓவியம் போல் சித்திரித்துத் திறம்பட வெளியிடுகிறது. வாழ்வின் உண்மையான சித்திரத்தைப் பிற்காலத்தவருக்கு வழங்குகிறது”
- ஒரு நாட்டின் சமூகத்தின் வரலாற்றை வடிவமைக்க இலக்கியம் உதவுகிறது
- “பிரெஞ்சு எழுத்தாளரான பால் ஜாக்கின் புதினங்கள், பிரெஞ்சு வரலாற்றறிஞர்களை விடவும் அதிகமான வரலாற்று உண்மைகளை வழங்கி விடுகின்றன”– பிரடெரிக் ஏங்கல்ஸ்

- இலக்கியங்களில் உள்ள குறியீட்டு மொழிகளைப் புரிந்து கொள்ளவேண்டும்
- இலக்கியம் நேரடியாக வெளிப்படையாக எதையும் கூறுவதில்லை.
- வரலாற்று நிகழ்வின் மீதுதான் நிகழ்கிறது
- கல்வெட்டு, புதைபொருள் அகழ்வாராய்ச்சியுடன் ஒப்பிட்டு பார்க்கவேண்டும்
- கிரேக்க உரோம நாணயங்கள்
- 1895-1901 இல் வெ. கனகசபை என்பவர்தான் தமிழர் வரலாற்றை இலக்கியங்களில் இருந்து உருவாக்கினார்.